# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 13,162—1962 ජූනි 8 වැනි සිකුරාදා—1962.6.8

13,162 ம இலக்கம்—1962 ம் ஆண்டு யூன் மாதம் 8 ந திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விலேக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | — |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 365 | " மதுவரிச்சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

இல. எல். டி/120.

### வனபரிபாலன கட்டளைச் சட்டம்

வனபரிபாலனக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 451) 4 (2) ம் பிரிவினுல் தம்மீது பொறுப்பிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு விவசாய, காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சராலாக்கப்பட்ட கட்டளை.

சீ. பீ. டி சில்வா,
விவசாய, காணி, நீர்ப்பாசன,
மின்சார அமைச்சர்.

கொழும்பு,
1962 ம் ஆம் மே மீ 11 ந் உ.

**கட்டளை**

சப்ரகமுவா மாகாணத்து இரத்தினபுரி மாவட்டத்து நவதுன் கோரளை யின் பல்லேபற்றில் உள்ள எலபாத கிராமத்தில் அமைந்துள்ள கெகுன கொட்டுமுகலாஞ, கொமலதெனியெமுகலாஞ, வதுவலயஹென முகலாஞ, பொதுவிலமுகலாஞ, குருகேகென என அழைக்கவும் வழங்கவும்படும் காணியை ஒரு கிராம வனமாக்கி, 1922 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ம் தேதிய 7,254 ம் இலக்க கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட பிரகடனம், இதன் அட்டவணையில் விவரிக்கப்படும் அக்கிராமவனத்தின் பாகத்துடன் அப்பிரகடனம் சம்பந்தப்படும் அளவுக்கு இத்தால் அழிக்கப் படுகின்றது.

**அட்டவணை**

இறுதிக் கிராம மாதிரிப்படம் இல. 75 ல் காணித் துண்டுகள் 11டி, 33சி, 34, 34சி, 32 எனக் காட்டப்பட்டுள்ளதும் 45 ஏக்கர் 1 றூட் 36 பேர்ச் விஸ்தீரணமுள்ளதுமான நிலப்பரப்பு முழுவதும்.

6–299

---

இல. இ. இ./2055.

### கடற்றெழில் கட்டளைச் சட்டத்தின் (212) ம் அத்தியாயத்தின், பிரிவு 20 (9) ம் கீழுள்ள அறிக்கை

மன்னர், முசலி, மாந்தை, மாவட்ட இறைவரி அதிகாரிகளைச் சார்ந்த இலங்கைக் கடல்களின் கரைப்பகுதிகளில், தமக்குரிய மீன்பிடி உரிமைகள் சம்மந்தமாய், மன்னர் மாவட்ட இறைவரி அதிகாரியின் பகுதியில் நிரந்தர வாசிகளான கரைவலையர்களுக்கும், முசலி, மாந்தை மாவட்ட இறைவரி அதிகாரியின் பகுதிகளிலும், நீர்கொழும்பு முதலான மற்றைய இடங் களிலிருந்து வள்ளங்களிலும், யந்திரப்படகுகளிலும் வரும் கரைவலை யர்களுக்கும் இடையே எழுந்த தகராற்றினை விசாரணை செய்வதற்காக நியமித்த மத்தியட்சரின் அறிக்கை பொதுமக்களின் அறிவித்தலுக்காக இத்தால் பிரசுரிக்கப்படுகின்றது.

2. இம்மீன்பிடித் தகராற்றினுல் பாதிக்கப்படுகின்ற எவரேனும், அல்லது இத்தகராற்றுடன் சம்பந்தப்பட்ட அல்லது இத்தகராற்றினுல் சம்பவிக்கக்கூடிய எந்த விடயத்தையிட்டும், அல்லது இவ்வறிக்கையில் வழங்கியுள்ள எந்த விடயத்தையிட்டும் முறையீட்டாட்சேபனை தெரி விக்க விரும்புவோரெவரேனும், அதை இவ்வறிவித்தல் பிரசுரித்த தினத்திலிருந்து ஒரு மாதம் முடிவடையுமுன்னர், விவசாய, காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சர் அவர்களுக்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும்.

எம். ஸ்ரீ காந்தா,
மேலதிக நிரந்தரச் செயலாளர்,
விவசாய, காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சு.

கொழும்பு,
1962 ம் ஆம் மே மீ 28 ந் உ.
6—257

### மன்னர் மீன்பிடித் தகராறு

**அறிக்கை**

மேற்கூறிய தகராறு விவசாயம், காணி, நீர்ப்பாசனம், மின்விசை அமைச்சரவர்களின் 1961 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 6 ந் திகதியிட்ட கடிதத்தினுல் விசாரணைக்காக எனக்கு ஒப்புவிக்கப்பட்டது. அதன் அடக்கம் பின்வருமாறு :—

" 1952 ம் ஆண்டின் 25 ம் இலக்கக் கடற்றெழில் (திருத்த) அதிகாரச் சட்டத்தினுலும் 1956 ம் ஆண்டின் 30 ம் இலக்க அதிகாரச் சட்டத்தினு லும் திருத்தம் செய்யப்பட்டபடியுமான 1940 ம் ஆண்டின் 24 ம் இலக்கக் கடற்றெழிற் கட்டளைச் சட்டத்தின் 18 அ (1) பிரிவின் சாராம்சப் படி மன்னர்ப் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவிலும் முசலிப் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவிலும் மாந்தைப் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவிலும் நிரந்தரமாய் வதிந்து வரும் மீன்பிடியாளர்களுக்கிடையிலும் நீர்கொழும்பிலிருந்தும் ஏனைய பிராந்தியங்களிலிருந்தும் புலம் பெயர்ந்து செல்லும் குல்லாத் தோணி, எந்திரமயமாக்கிய படகு மீன்பிடியாளர்களுக்கிடையிலும் மன்னர், முசலி, மாந்தைப் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர்களின் பிரிவுகளின் கரையோரப் பிராந்தியத்தையடுத்துள்ள இலங்கை நீரகத்தில் அவரவர் களுக்குரிய மீன்பிடி உரிமைகள் சம்பந்தமாயெழுந்துள்ள ஒரு தகராற்றினை யான் தங்களிடம் ஒப்புவிக்கிறேன்.

2. இத் தகராற்று விடயம் பின்வருமாறு :—

மன்னர்ப் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவிலும் முசலிப் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவிலும் மாந்தைப் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவிலும் நிரந்தரமாய் வதிந்துவரும் மீன்பிடியாளர்கள், மன்னர், முசலி, மாந்தைக் கரையோரப் பிராந்தி

யத்தை யடுத்துள்ள இலங்கை நீரகத்தில் மீன்பிடிப்பதற்குப் புறநீக்கலான தனி உரிமையைக் கோருகின்றனர். இதினும் இதற்கடுத்துள்ள நீரகத்திலும் நீர்கொழும்பிலும் ஏனைய பிராந்தியங்களிலுமிருந்து புலம் பெயர்ந்து வரும் குல்லாத்தோணி, எந்திரமயமாக்கிய படகு மீன்பிடியாளர்களின் மீன்பிடிச் செயலாற்றல்கள், தங்கள் சொந்த மீன்பிடிச் செயலாற்றல்களை எதிரிடையாய்ப் பாதிக்கின்றதென அவர்கள் புகார் செய்கின்றனர். புலம்பெயர்ந்துவரும் குல்லாத்தோணி, எந்திரமயமாக்கிய படகு மீன்பிடியாளர்கள், மன்னர், முசலி, மாந்தைப் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர்களின் பிரிவுக் கரையோரப் பிராந்தியங்களை யடுத்துள்ள இலங்கை நீரகத்தில் மீன்பிடிப்பதையும் இந் நீரகத்திலிருந்து செயலாற்றுவதையும் விலக்கிவைக்க வேண்டுமென அவர்கள் வேண்டுகின்றனர்.

நீர்கொழும்பிலும் ஏனைய பிராந்தியங்களிலுமிருந்து புலம்பெயர்ந்து வரும் குல்லாத் தோணி மீன்பிடியாளர்களிற் சிலர் இந்த நீரகத்தில் நீண்ட காலமாய் மீன்பிடித்து வருகின்றனரென்று குற்றம் சாற்றுகின்றனர். ஆனல் அவர்கள் எல்லோரும் இந்த நீரகத்தில் மீன்பிடிக்க உரிமையைக் கோருகின்றனர். மன்னர், முசலி, மாந்தைப் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர்கள் பிரிவுகளில் நிரந்தரமாய் வதிந்துவரும் மீன்பிடியாளர்களின் மீன்பிடிச் செயலாற்றல்களை அவர்களின் மீன்பிடிப்பு முறை எதிரிடையாய்ப் பாதிக்கின்றதல்லவென்றும் அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

3. இத்தகராற்றையிட்டு ஒரு பகிரங்க விசாரணையை நடத்துமாறும் இதன் விடய அடக்கத்தையிட்டு மாத்திரமல்லாது, இப்பிரிவின் நியதிகளுக்கமைய தங்களிடத்தில் செய்யப்படும் மகஜர்கள் ஏதாவதிலாகுதல் குறிப்பிடக்கூடியதான, இத்தகராற்றிலிருந்தும் எழும் எல்லா விடயங்களையுமிட்டும் அறிக்கை சமர்ப்பிக்குமாறு தங்களை யான் கேட்டுக் கொள்கிறேன்.

இங்ஙனம்,
தங்கள் பணிவுள்ள ஊழியன்,
சீ. பீ. டி சில்வா,
விவசாயம், காணி, நீர்ப்பாசனம், மின்விசை அமைச்சர்."

இலங்கைச் சட்டவாக்கங்களின் 1956 ம் ஆண்டின் புதுக்கிய பதிப்பில் கடற்றொழிற் கட்டளைச் சட்டம், அத்தியாயம் 212 ஆகத் தெரிப்படுகின்றதென்றும், ஒரு தகராற்றை பகிரங்க விசாரணைக்காகவும் அறிக்கைக்காகவும் ஒருவரிடத்தில் ஒப்படைப்பதற்கு அமைச்சருக்கு அதிகாரமளிக்கும் பிரிவு 20 (1) என இப்பொழுது இலக்கமிடப்பட்டிருக்கின்றதென்பதையும் யான் சேர்த்துக்கொள்ள வேண்டியவனுயிருக்கின்றேன். யான் இதனைக் குறிப்பிடுவது எதற்காகவெனில், இந்த இலங்கைச் சட்டவாக்கங்களின் மிகப் பிந்திய பதிப்பு, இவ் விசாரணையிற் பாவிக்கப்பட்டபடியாலும் ஆரம்ப ஒப்பாசாரங்களோடு சம்பந்தப்பட்டவைகளைவிட, ஏனைய விடயங்களிலெல்லாம் எனது அறிக்கையில் என்னல் எடுத்தாளப்படும் என்பதனுலுமேயாகும்.

1952 ம் ஆண்டின் 25 ம் இலக்க கடற்றொழில் திருத்த அதிகாரச் சட்டத்தின் பிரிவு 18 அ (3) இன் நியதிகளின்படி, 1961 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 17 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வண்ணம் எழுத்து மூலமாக மகஜர் செய்யுமாறு இத்தகராற்றில் அக்கறையுள்ள எல்லோரையும் அழைத்து 1961 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 10 ந் திகதியின் 12,314 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியான மார்ச்சு 7 ந் திகதியிட்ட அறிவித்தலை யான் விடுத்தேன். 1961 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 28 ந் திகதியன்று மன்னரில் பகிரங்க விசாரணையை ஆரம்பிப்பேனென்றும் யான் குறிப்பிட்டிருந்தேன். பதின்மூன்று (13) மகஜர்கள் கிடைத்தன.

மார்ச்சு மாதம் 28 ந் திகதி தொடங்கிய பகிரங்க விசாரணை, அவசரகால ஒழுங்குவிதிகளினல் விதிக்கப்பட்ட நடமாட்டக் கட்டுப்பாட்டின் காரணமாகத் தொடர்ந்து நடத்த முடியாது போய்விட்டது. எனினும், கட்சிகளின் பிரமுகர்களைப் பேசுமாறு அனுமதிக்க இச்சந்தர்ப்பம் பயன்படுத்தப்பட்டது. இப்பேச்சுகள், தத்தம் பிணக்கின் சாராம்சத்தைப் புலப்படுத்தின. நீர்கொழும்பிலிருந்து புலம் பெயர்ந்து வரும் குல்லாத் தோணி மீன்பிடியாளர்களுக் கெதிராக உள்ளூர் மீன்பிடியாளர்கள் கடும் முறைப்பாடேதும் செய்வதற்கில்லையென்பதும் உண்மையில் நீர்கொழும்பிலிருந்து புலம் பெயர்ந்துவரும் குல்லாத் தோணி மீன்பிடியாளர்களும் நீர்கொழும்பிலிருந்துவரும் எந்திரமயமாக்கிய படகு மீன்பிடியாளர்களுக் கெதிராக இதனை ஒரு பொதுக்காரியமாக்கிக்கொள்ள அவர்கள் விரும்பினரென்பதும் விரைவில் தெளிவாயிற்று.

ஒழுங்கு விதிகளேதும் விதித்திராமையால், எனது நடைமுறை ஒழுங்கை யானே அமைத்துக்கொள்ள வேண்டியிருந்தது. உள்ளூர் மீன்பிடியாளர்கள் தங்கள் விவகாரத்தை முதலில் கூறவேண்டுமென உடன்படப்பட்டது. ஆணையாளர் என்ற கோதாவில் தேவையான வேளைகளிலெல்லாம் அரசாங்க ஊழியர்களை யான் அழைத்துள்ளேன். ஆனல், பொதுவாக நீதிமன்ற விசாரணையைப் போன்ற விசாரணை பின்பற்றப்பட்டது.

"அவசரகால" முஸ்தீபுகள் குறைக்கப்பட்ட பின்னர், மேலுமொரு பகிரங்க விசாரணை 1961 ம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ந் திகதியில் நடாத்தப்பட்டது. உள்ளூர் மீன்பிடியாளர்களுக்கும் குல்லாத்தோணி மீன்பிடியாளர்களுக்குமாகத் தெரிபட்ட திரு. நவரத்தினம் புலம் பெயர்ந்து வரும் நீர்கொழும்பு எந்திரமயமாக்கிய படகு மீன்பிடியாளர்கள் செய்துள்ளவாறு ஒரு சிரேஷ்ட நியாயவாதியைத் தன் கட்சிக்காரர் அமர்த்துவதற்கு முடியாதவர்களாயிருந்தனரென வழக்குரைத்து, இதனை மேலும் தவணைபோடுமாறு பணித்தார். ஈற்றில் உடன்பாட்டின் பிரகாரம் எதிர்கால விசாரணை அமர்வுகள் கொழும்பில் நடாத்தப்பட்டன.

எனது அறிக்கையைப் பூர்த்திசெய்ய இவ்வளவு நீண்டகாலத்தை யான் எடுத்தேனென்பதை இஃது விளக்குகின்றது. சுருங்கக் கூறின் மார்ச்சு 28 ந் திகதி, நவம்பர் 15 ந் திகதி, 1961 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13, 14, 15 ந் திகதிகள், 1962 ம் ஆண்டு ஜனவரி மாதம் 17, 18, 19, 20, 22, 23 ந் திகதிகளிலுமாக, எல்லாமாய் 11 நாட்களில் விசாரணைகளை யான் நடாத்தினேன். இத்தோடு, 1961 ம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ந் திகதியிலும் 1962 ம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ம் திகதியிலும் மன்னர்க் கரையோரத்தை யானே பார்வையிட்டேன்.

**மீன்பிடி உரிமைகள் :**

உண்மைகளை ஆராயுமுன், மீன்பிடி உரிமைகளையிட்டு ஒரு சில அவதானங்களைக் குறிப்பிடுவது விரும்பகமானதென யான் நினைக்கின்றேன். கற்றுணர்ந்த நியாயவாதி, சட்டத்தை எனக்கு விளக்கி, ஒரு தொகையான சுப்ரீம் கோட்டுத் தீர்ப்புகளை என் கவனத்திற்குக் கொண்டுவந்தார். சட்டம், மடப்புள்ளிக்கு எதிராகப் பற்றிக் 54 பு.ச.அ. 366 முற்றுய்ப் பொருள் கூறி விளக்கி, மட்டுப்படுத்திய மோதரை பட்டுவத்தைக் கூட்டுறவு மீன்பிடிச் சங்கத்திற்கு எதிராக குணவர்தன 62 பு.ச.அ. 189 ஆல் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஏனையவற்றோடு ஒப்பிடும்போது இரு தீர்ப்புகளும் அண்மையானவைகளும் கடற்றொழிற் கட்டளைச் சட்டம் அமுலுக்கு வந்த பின்னரே கூறப்பட்டனவுமாகும்.

ஆதலின், வழமைச் சட்டத்தின் கீழ், பொது மக்கள் ஒவ்வொருவருக்கும் பொதுமைக் கடலில் எந்தப் பாகத்திலும் மீன்பிடிப்பதற்குச் சம உரிமையுண்டென்பது விதிக்கப்பட்டிருக்கின்றது.

எனினும், உரிமைகள், நியதிச் சட்டத்தினல் குறைக்கப்பட்டோ, ஒழுங்கு படுத்தப்பட்டோ அல்லது நிராகரிக்கப்பட்டோ இருக்கலாம். இதுதான் உண்மையில் இலங்கையிலுள்ள நிலைமையாகும். உதாரணமாக, கடற்றொழிற் கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் 212 இன் பிரிவு 33 (1) "மீன்பிடித்தொழிலை ஒழுங்கு படுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் இலங்கை நீரகத்தில் மீன்களைப் பாதுகாப்பதற்கும் பொதுவாக இக்கட்டளைச் சட்டத்தின் தத்துவங்களையும் நியதிகளையும் அமுல் நடாத்தும் அல்லது நிறைவேற்றும் காரணங்களுக்கும்" ஒழுங்குவிதிகளையாக்க அமைச்சருக்கு அதிகாரமளிக்கின்றது.

ஆதலின், இலங்கை நீரகத்தைத் தனிப்பட்டோர், பாவிப்பதையிட்ட உரிமைகளிருந்தபோதிலும் கடற்றொழிலுக்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரிடத்தில், அவைகளைக் குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ அதிகாரமிருக்கின்றது. எனினும், "இலங்கை நீரகத்துக்கு" அப்பால் மீன்பிடியைக் கட்டுப்படுத்துவதற்கு, கடற்றொழிற் கட்டளைச் சட்டம், அமைச்சருக்கு எவ்விதமான அதிகாரத்தையும் அளிக்கின்றதல்ல வென்பது குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

வழமையைப் பொறுத்தவரையில், மடப்புள்ளிக்கு எதிராக பற்றிக்குவில் அளிக்கப்பட்ட தீர்ப்பு, வழமைக்கு உரிமைகளை ஒழுங்குபடுத்த முடியும் ஆனல், அவைகளை ஒருபோதும் ஒழிக்கமுடியாதென்பதைத் தெளிவாக்குகிறது. ஒரு வழமை நீண்டகாலமாய்த் தாபிதம் செய்யப்பட்டதாகவும் நியாயமானதாகவும் இருந்து வந்திருப்பதாக நிரூபிக்கப்பட்டால் மாத்திரமே அதற்கு ஒரு உடன்படிக்கையின் பலமுள்ளதாகும். ஆனல், அப்படித்தானிருந்தாலும் வழமை, ஒரு குறித்த நிலைமையின் கீழ்; பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு கட்சிகளுக்கிடையே ஏற்படுத்தப்படும் ஒரு உடன்படிக்கையாகும். அதே நீரகத்தில் தங்கள் உரிமைகளைப் பிரயோகப்படுத்துவதற்கு அடுத்துத் தெரிந்து கொள்ளும் ஏனைய கட்சிகளை இது கட்டுப்படுத்தாது. "வழமைக்கு எதிர்கால இடர்பாடு ஒன்றைச் சமாளிக்க ஒரு விதியை உருவாக்க இயலாது". உண்மையில், கடற்றொழிலுக்குப் பொறுப்பாயுள்ள அமைச்சருக்கு, ஒழுங்கு விதிகளை வகுப்பதால், இருந்துவரும் வழமை ஒன்றை அழியா வண்ணம் நிலைநாட்ட அதிகாரமிருக்கின்றது.

**இலங்கை நீரகங்கள் :**

கடற்றொழிற் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் அமைக்கக் கூடிய நீரகம், "இலங்கை நீரகம்" ஆகும். அத்தியாயம் 212 இன் பிரிவு 35, இச்சொற்றொடருக்கு பின்வருமாறு இலக்கணம் கூறுகின்றது :—

"இலங்கை நீரகம்"

(அ) இலங்கை உரிமைக் கடல் நீரகத்தையும்,

(ஆ) எல்லாப் பொதுக் குடாக்களையும், நதிகளையும், கடலேரிகளையும், கழிமுகங்களையும், நீருற்றுகளையும், குளங்களையும், தடாகங்களையும், கால்வாய்களையும், ஏனைய எல்லாப் பொது உள்ளூர் நீரகங்களையும் அடக்கும்.

"உரிமைக் கடல் நீரகம்" என்பதன் அர்த்தம், சாதாரண வசந்த காலப் பெருக்கு நீரேற்படுத்தும் பதிந்த அடையாளத்திலிருந்து, இலங்கைக் கரையோரத்தில் எந்த ஒரு புள்ளியிலிருந்தாவது நாவிகர்க்குரிய மூன்று மைல்கள் தூரத்திற்குள்ள கடற்பாகம் என்பதாகும்.

இது வரைச் சட்டமும் தெளிவாயிருக்கின்றது. ஆனால், 1957 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ந் திகதியின் 11,222 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியானதும் 1957 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ந் திகதியிட்டதுமான மாட்சிமை தங்கிய மகா இராணியின் பேரில், மேன்மை தங்கிய மகா தேசாதிபதியினால் செய்யப்பட்ட ஒரு பிரகடனத்துக்கு, உள்ளூர் மீன்பிடியாளர்களின் நியாயவாதி என் கவனத்தைக் கவரச் செய்தார். அஃது பின்வருமாறு கூறுகிறது :—

"ஒரு இராட்சியத்தின் ஆழுமை, அந்த இராட்சியத்தின் உரிமைக் கடல் நீரகமெனப் பொதுவாக அழைக்கப்படும். அதன் கரையோரத்தை அடுத்துள்ள ஒரே அகலமான கடற் பாகத்திற்கு வியாபித்திருக்கின்றதெனச் சர்வதேசச் சட்டம் நன்மதிப்புக் கொடுப்பதாயிருந்தாலும், ஒரு இராட்சியத்தின் உரிமைக்கடல் நீரகத்தின் வியாபகம் சம்பந்தமாகச் சர்வதேச வழமை ஒரே தன்மைத்தானதாயில்லாமையால், இலங்கையில் உரிமைக் கடல் நீரக வியாபகத்தைப் பிரதிக்ஞை செய்யவேண்டியது தேவையாயிருக்கின்றது.

ஆதலின், இப்பொழுது, ஒலிவர் எணஸ்ற் குணதிலகா, இலங்கை மகா தேசாதிபதியாகிய யான், இதற்குமாறாக இலங்கை அல்லது அதன் பாகம் எதாவது சம்பந்தமாக நிறைவேற்றப்பட்ட சட்டவிதி அல்லது வழமை எதற்காகுதல் எவ்விதமான தவிர்ப்புமின்றி, இலங்கை உரிமைக் கடல் நீரகம் உரிய கரைக் கோட்டிலிருந்து, கடற்புறமாக, அளக்கப்படும் ஆறு மைல் தூரத்திற்கு வியாபித்திருக்குமென இப்பிரகடனத்தினால் பிரதிக்ஞை செய்கிறேன்".

இப்பிரகடனத்தின் நியதிகளையிட்டு யான் கவனமாய் ஆலோசித்துள்ளேன். இலங்கையை யடுத்துள்ள ஒரே அகலத்தினையுடைய ஆறு மைல் கடல் நீரகத்தின்மீது இலங்கை ஆழுமை என்பதையிட்ட ஒரு பிரகடனம் மாத்திரம் தானென்பதாக அது எனக்குத் தென்படுகின்றது. இப்பொழுது ஆட்சியிலுள்ள சட்டத்தைத் திருத்தம் செய்ய இது தேடவில்லை. ஆனால், விஸ்தரிக்கப்பட்ட உரிமைக் கடல் நீரகப் பகுதிக்குள், எந்த விதமான செயலாற்றலுக்கும் தேவையாயிருந்தால், புதிய சட்டங்களைப் புகுத்தும் உரிமையைக் கோருகின்றது.

ஆதலின், இப்பிரகடனம்; கடற்றொழிற் கட்டளைச் சட்டத்தின் மட்டுப்படுத்திய வரைவிலக்கணத்தை மீறுகின்றதல்லவென யான் முடிக்கிறேன். இது ஆகச் செய்வதெல்லாம் என்னவென்றால், கட்டளைச் சட்டத்தில் உரிமைக் கடல் நீரகங்களின் எல்லைகளை மாற்றியமைக்க சட்ட அமைப்புச்சபைக்கு வழி வகுத்துள்ளது. இஃது செய்யப்படவில்லை. ஆதலின், நாவிகர்க்குரிய மூன்று மைல் எல்லைக்கப்பால் மீன்பிடிச் செயலாற்றல்களைக் கட்டுப்படுத்துவதற்கு ஒழுங்கு விதிகளை வகுப்பதற்கு கடற்றொழிற் கட்டளைச்சட்டத்திற்கு அதிகார மளிக்கமுடியாது.

**கரைவலை மீன்பிடி :**

இந்த விசாரணைக்குக் கட்சிக்காரர்களான உள்ளூர் மீன்பிடியாளர்கள், கரைவலையென அழைக்கப்படும் ஒரு பெரும் வலையை உபயோகிக்கின்றனர். (சிங்களத்தில் இது மாதல் என அழைக்கப்படுகின்றது.) இந்தவிதமான ஒரு வலை, "பாடு" என அழைக்கப்படுகின்ற ஒரு பகுதிக் கடற்கரைக்கு எதிரே கடலிற் போடப்பட்டு, வலையோடு இணைக்கப் பட்டகம்பான் கயிற்றால் இழுத்தெடுக்கப்படுகின்றது. மன்னார்த் தீவில் ஒரு பாட்டின் நீளம் சுமார் கால் மைல் அளவிலிருக்கும். வலையின் ஆகக் கடைசி அந்தம் கரையிலிருந்து இரண்டு மைல் அல்லது அதற்கு மேற்பட்ட நீளத்திற்கப்பாலிருக்கும். இந்த் வித்மான மீன்பிடிப்பு முறை ஒரு பெரும் நீர்ப் பிராந்தியத்திற்குள் இருக்கும் மீன்களை வளைந்து அகப்படுத்திக் கொள்ளுதல் என்பதாகத் தெரிகின்றது.

பிடிபடும் மீன்கள் உள்ளூர்வாசிகளினதாகும். ஆனால் கண்டக் கடல் மறைகரையைச் சுற்றி உணவு, இனப்பெருக்கம் முதலிய காரணங்களுக்காக அலைந்து திரிகின்றதும் அடிக்கடி கரைப்புறமாகவர எத்தனிக்கின்றதுமான மீன் கூட்டத்தை அகப்படுத்துவதிலும் பெரும் வெற்றி தங்கியிருக்கின்றது. சில வேளைகளில் இந்த மீன்கள், ஏற்கனவே இவைகள் இருக்கின்ற இடத்தைக் கண்டுகொண்ட பின்னர் பிடிக்கப்படுகின்றன. மற்றைய வேளைகளில் குருட்டுத்தனமான வழமைப்படி பிடிக்கப்படுகின்றன. மீன்களைக் கரையிலிருந்தும் வேறு முகமாகத் திருப்பிவிடுகின்ற வேறு எந்த வித்மான மீன்பிடியும் வலை அடக்குகின்ற இடப்பிராந்தியத்திற்குள் புகுகின்ற மீன்களில் தங்கியிருப்பதான கரைவலை மீன்பிடியில் விழைவினையுண்டாக்குமெனச் சுட்டிக்காட்டுதல் மாத்திரமே தேவையாகும்.

கரைவலை மீன்பிடியின் உற்பத்தியில் ஒரு பண்டைமுறையாகவும் திருத்தியமைக்கக்கூடியதாகவு மிருக்கலாம். ஆனால், இலங்கை மீன்பிடியில் மிக முக்கியமான தனி அளவை வழங்கிவருகின்றதெனும் உண்மை இருக்கின்றது. பி. 20 இலுள்ள எண்ணிக்கைகள் ஏற்றுக்கொள்ளப் படாவிட்டாலும் செயலாற்றும் அளவினையிட்டுப் பொதுவாயறிந்து கொள்ள அவை போதிய அளவு நம்பகமானதென யான் நம்புகின்றேன். இலங்கையிற் பிடித்துக் கரையேற்றப்படுகின்ற மூழு மீனில் கரைவலை 40 முதல் 50 சத விகிதத்திற்கிடையில் வழங்கியுதவுகின்றதென்றும், இதில் மன்னார் மாவட்டத்திலிருந்து சுமார் 10 சத விகிதம் வருகின்றதென்றும் இப்பகுதி, பதப்படுத்துவதற்கான மீனையும் சேர்த்து வருடமொன்றுக்கு சுமார் 50 இலட்சம் இருத்தல் மீன் அளவில் உற்பத்தி செய்கின்ற தென்பதும் புலனுகின்றது. இஃது (பி. 30 இன்படி) 68 பாடுகளிலிருந்து வருகின்றது. ஊதிபம் குறைந்த பாடுகளுக்கு இடம்விட்டு, ஒரு நல்ல பாடு, வருடமொன்றுக்கு 100,000 இருத்தல் என்ற ஒழுங்கின்படி உற்பத்திசெய்ய வேண்டும். தகராறு சம்பந்தப்பட்ட பிரதான பிராந்தியம் அஃதாவது, மன்னார்த் தீவின் தென் கரையின் வருடாந்த சராசரி மீன்பிடி இதையும் விடக் கூடியதாகும்.

மன்னார் மாவட்டத்திலுள்ள கரைவலை மீன்பிடியோடு சம்பந்தப்பட்ட ஜனத் தொகையின் நம்பிக்கையான எண்ணிக்கை இல்லை. ஆனால், பாடு ஒவ்வொன்றுக்கும் 50 என்ற ரீதியில் நேரடியாய் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் தொகை 3,400 ஆகும். வருடம் முற்றும் எல்லா இடங்களிலும் மீன்பிடிக்க முடியாததினால் இது ஒவ்வொரு ஆளினதும் வருடாந்த மீன்பிடி 1,500 இருத்தல். அப்படியாயின் நாளொன்றுக்கு 7 இரு. மீனையும் பிடிக்கின்றான். இஃது, இலங்கைக் கரைவலை மீன்பிடித் தொழில் பி. 11 இலுள்ள அட்டவணை 3 இலுள்ள எண்ணிக்கையோடு நெருங்க ஒத்து நிற்பதால், இதிலீடுபட்டுள்ள மதிப்பீட்டு ஜனத்தொகை பெரும் பிழையானதாயிருக்க முடியாது. இஃது உண்மையின் படி, தாபரிப்பிலுள்ள வர்களையோ அல்லது மறைமுகமாகத் தொழில் பெறு வோர்களையோ அடக்கவில்லை.

கடற்கரை அரசாங்கத்தின் உடமை. மன்னார்த் தீவில், அண்மையில் மீன்பிடியிலீடுபட்டுள்ள கிராம மக்களுக்கு ஒரு சில பாடு உத்தரவாணைகளை அரசாங்க அதிபர் அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். ஆனால், அனேக பாடுகளுக்கு உத்தரவாணைகள் எடுக்கப்படவேயில்லை. மீன்பிடிக் கிராமங்கள், கடற்கரையின் நீண்ட பாகத்தை உபயோகிக்கும் உரிமையை அனுபவித்து வந்திருக்கின்றன. தகராறுகளைத் தடுக்க வேறு வேறான கிராமங்களின் பாடுகளை பிறிம்பாக்குவதற்கு நிலத்தில் அடையாளங்களிடப்பட்டிருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட கிராமத்தோடு இணைந்துள்ள கடற்கரை, உடன்படிக்கையால் சம்மாட்டிகளுக்கிடையே பிரிக்கப்பட்டிருக்கின்றது. இவர்கள் வலைச் சொந்தக்காரர்களும் மீன்பிடிச் செயலாற்றல்களைத் தாமே செய்விக்கின்றவர்களுமாவர். நடப்பதன்படி, உள்ள பாடுகளைவிட சம்மாட்டிமார் அதிகமானவர்களாயிருப்பமையால் மாற்று முறையைக் கையாளவேண்டிய தேவையிருக்கின்றது. வேறொரு விதமாய்க் கூறின், மன்னார்த் தீவிலுள்ள எல்லாத் தகுதியான பாடுகளும் பிரயோகிக்கப்பட்டு வந்தன. பிரயோகிக்கப்பட்டும் வருகின்றன.

இக்கருத்துகள் நன்கு தாபிதம் செய்யப்பட்ட தொழில் ஒன்றின் முக்கிய அம்சங்களை நிலைகுலைப்பது மதியின்மையும் சிக்கனமற்றதுமாகும். அதே நேரத்தில், இப்போதுள்ள நிலை, முற்றும் பாதுகாக்கப்படல் வேண்டுமெனவும் யாரேனும் நியாயப்படி யோசனை கூற முடியாது. ஆராய்ச்சி உத்தியோகத்தர் டாக்டர் கனகரத்தினம் அவர்களின் சாட்சியத்திலிருந்து கரைவலை மீன்பிடி நுட்பத்தை அபிவிருத்தி செய்வதற்கு இடமிருக்கின்றதென்பது வெளிப்படையாய்த் தெளிகின்றது. மன்னாரில், கரைவலை மீன்பிடியாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட உரிமையென்ற கேழ்வியில்லை யென்பதும் அதேயளவு வெளிப்படையாய்த் தெரிந்தது. மற்றைய வித மீன்பிடிகள் விருத்தியாவதற்கும் ஆங்கு ஏற்பாடுகளிருக்கவேண்டும். இது சம்பந்தமாக, வழமையின் வல்லமை என்பதையிட்டு யான் ஏற்கனவே வழங்கிய கருத்துரையை ஈண்டு குறிப்பிட விரும்புகிறேன். புதிய விதமான மீன்பிடியிலும் மன்னார் நீரகத்தை உபயோகிப்பதிலும் விரும்பும் மீன்பிடியாளர்களை வழமை கட்டுப்படுத்தாது.

**குல்லாத்தோணி மீன்பிடி :**

"குல்லாத் தோணிகள்" கொல்லாவையும் பாய்ச் சீலையையும் உடைய தோணிகளாகும். ஒரு குல்லாத் தோணி, கரையிலிருந்தும் இருபத்தைந்து மைல்கள் வரையும் போகக்கூடியன. ஆனால், பொதுவாக அவைகள் அவ்வளவு தூரம் போவனவல்ல. காற்றையும் நீரோட்டத்தையும் பொறுத்து இதன் இடப் பெயர்ச்சி மட்டுப்பட்டிருக்கின்றது. மன்னாருக்கு அண்மையிற் செயலாற்றுகின்ற குல்லாத் தோணிகள் தொடுவானுக்கு, அஃதாவது, கிட்டத்தட்ட 8 மைல்களுக்கப்பால் போவதாகத் தெரியவில்லை. குல்லாத் தோணிகள், தூண்டிற் கயிறுகளையும் வளிச்சல் வலைகளையும் பாவிக்கின்றன. வளிச்சல் வலை கரையோர நீரகங்களிற் பாவிக்கப்படுகின்றது.

நீர்கொழும்புக் குல்லாத் தோணி மீன்பிடியாளர்களுக்கு மன்னார் நீரகத்தில் மீன்பிடிப்பது வழக்கமாயிருந்தது. 1944 ம் ஆண்டில் அவர்களுக்கும் உள்ளூர் மீன்பிடியாளர்களுக்கு மிடையில் ஒரு பிணக்கிருந்தது. குல்லாத் தோணி மீன்பிடியாளர்கள் (மன்னாருக்கு ஜனவரியிலிருந்து பாஸ்கை (ஈஸ்டர்) வரைக்கும் ஜூலையிலிருந்து செப்டம்பர் வரைக்கும்) வரும் மன்னார்த் தீவின் தென்கரைக்குச் சமாந்தரமாய்ச் செல்லும் கற்பாரிலுள்ள இடைவெளிகளில் வளிச்சல் வலைகளைக் கட்டி, கரைவலை மீன்பிடிப்பைக் குறைத்து விடுகின்றனர் என்பது அவர்களுடைய முறையீடாகும்.

இவ்விடயம் 1944 ம் ஆண்டு ஜனவரி மாதம் 6 ந் திகதி, கௌரவ எஸ். டபிள்யு. ஆர். டி பண்டாரநாயக்கா அவர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டது. அன்னவரின் தீர்மானம் பின்வரும் விதத்தில் பதியப்பட்டிருக்கின்றது :—

" நீர்கொழும்பு மீன்பிடியாளர்கள் சம்பந்தப்பட்ட வகையில் அமைச்சரவர்களின் தீர்மானம், அதே தொகையான படகுகள்,கொட்டுகளைப் பாவிக்கின்றன வென்றும்—அஃதாவது, 23 படகுகள், அவர்கள் கரையோரத்திற்கு மிக அண்மையாக, சாதாரணமாக மூன்று மைல்களுக்குள் வரக்கூடாதெனும் அடிப்படையில் 23 அனுமதியாணைகள் வழங்குவதாகும். கரையிலிருந்து உள்ள தூரம், பருவகாலம், மீன் பிடிக்கும் நேரம், உரிமை மாற்றம் முதலிய வைகளுக்கும் முன்னர் கிரமமாக வந்த மீன்பிடியாளர்களுக்கு மாத்திரமே அனுமதியாணைகள் வழங்கப்பட வேண்டுமெனும் நியதிகளுக்கும் அமைய உதவி அரசாங்க அதிபரவர்களிடமிருந்து அனுமதியாணை பெற்ருலல்லாது, வளிச்சல் வலையை உபயோகித்தல் சட்டவிரோதமானதென்பதாயாக்குவதற்கு அமைச்சரவர்கள், ஒழுங்கு விதிகளை வகுக்க ஆரம்பிப்பார். அத்தகைய அனுமதியாணைகள், உ. அ. அதிபரவர்களால் அன்னாரின் சொந்தத் துணிபின்படி, உள்ளூர் மீன்பிடியாளர்களுக்கு வழங்கப்படும். இந்த ஒழுங்கு விதிகளின் குறிக்கோள் என்னவாயின், வருடக்கணக்காக, தனிப்பட்ட புலம்பெயர்ந்து செல்லும் மீன்பிடியாளர்களின் தேட்டமான நலன்களைப் பாதுகாத்துக்கொண்டு உள்ளூர் மீனபிடியாளர்களின் நலன்களைப் பாதுகாத்தலாகும். அனுமதியாணைகளின் தொகையை தளராது குறைப்பதற்கும் ஒரேயடியாய்க் கட்டுப்படுத்துவதற்குமே நோக்கமென்பது வெள்ளிடை மலையே. புறநடையான சந்தர்ப்பங்கள் கவனத்திலெடுத்துக் கொள்ளப்பட்டாலும் அந்த அனுமதியாணைகள் வழங்குவதற்கு, தந்தையிலிருந்து தனையனுக்கு எனும் தலைமுறை உரிமைக்கு மதிப்புக் கொடுபடவில்லை.

ஒழுங்கு விதிகள் வகுக்கப்பட்டன. ஆனுல், அவைகள் ஒருபோதும் அமுலாக்கப்படவில்லை. எனுயிருக்குமாகில், அவைகளுக்கு எவ்வித தேவையும் இல்லாதிருந்த தாயிருக்கவேண்டும். இரு கூட்டக்காரர்களும் ஒரு தற்காலிகமான உடன்பாட்டைக் கண்டுபிடித்துக் கொண்டார்கள் போலும். இந்தத் தகராற்றில் குல்லாத் தோணி மீன்பிடியாளர்கள், நீர்கொழும்பு எந்திரமயமாக்கிய படகுச் சொந்தக்காரர்கள் புறமில்லாது, மன்னூர்க் கரைவலை மீன்பிடியாளர்கள் பக்கமாய் நின்ருர்கள்.

**எந்திரமயமாக்கிய படகுகள் :**

இவைகள் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட தொன்றுகும். எந்திரமயமாக்கிய படகுகள் (மிகச் சிறியது சுமார் 26 அடி நீளமானது) 33–35 மைல்கள் போய்வரக்கூடிய கோட்பாட்டு வீச்சு எல்லையிருந்தாலும் செயலளவில் கரையிலிருந்தும் சுமார் 5 மைல் மட்டிலுமே அவைகளின் எல்லையை வைத்துக் கொள்கின்றன. அவைகளால், தூண்டிற் கயிறுகள், கில் வலைகள், வளிச்சல் வலைகளைப் பாவிக்க முடியும். அவைகள் குல்லாத் தோணியைவிட, அதிகமாய் இடம் பெயர்ந்து சென்று வரக்கூடியனவும் கால நிலையாற் குறைவாய்ப் பாதிக்கப்படுவனவுமாகும்.

எந்திரமயமாக்கிய படகொன்றின் சராசரி மீன்பிடியை நிர்ணயிப்பது பெரும் கஷ்டமானதாகும். நாளொன்றுக்கு 350 இருத்தலிலிருந்து 100 இருத்தலுக்குக் குறைய வரையில் வித்தியாசப் பட்டதாக, வேறு வேருன சாட்சிகளால், கணிப்பான பேதங்களைக் காட்டும் சாட்சியம் கொடுக்கப்பட்டது. பி. 22. நீர்கொழும்பின் மீன்பிடிப்பு 1960 ம் ஆண்டில் 1,400,000 இருத்தலெனவும் 1961 ம் ஆண்டில் 600,000 இருத்தலெனவும் தருகிறது. ஈற்றில் வழங்கியுள்ள தொகை ஒரு வேளை பரிபூரணமற்றதாயிருக்கலாம். எனக்கு 1960 ம் ஆண்டுக்குரிய தொகை கிடைக்கவில்லை: ஆனுல், பி. 27 இன் பிரகாரம் 1961 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ந் திகதி நீர்கொழும்பில் 161 எந்திரமயமாக்கிய படகுகள் இருந்தன. இதனை ஆதாரமாய்க் கொண்டால், சராசரி மீன்பிடி, ஒரு படகுக்கு 10,000 இருத்தல் என்ற ஒழுங்கிலமையும். எவ்விதமிருந்தாலும் ஒரு தனித்த மன்னூர்ப் பாட்டின் முயற்சியாலாகும் உற்பத்தியை ஏற்படுத்த ஒரு தொகையான படகுகள் தேவைப்படும்.

என்து மதிப்பீடு,, படகுகளுக்காய் கடன்கள் சம்பந்தப்பட்ட சாட்சியத்திஞல் திட்டமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தள்வாடங்கள் உள்பட, முழுச் செலவும் கிட்டத்தட்ட ரூபா. 17,500/– உம் கடனைத் திருப்பிக் கொடுக்கும் தொகை மாதமொன்றுக்கு ரூபா. 500/– உமாகும். தொழிலை கொண்டு நடத்தும் காரணத்திற்காக கிட்டத்தட்ட ரூபா. 400/– ஒடு இத்தொகையை எடுக்க எத்தனையோபேர் வெளிப்படையாய்க் கஷ்டப்படுவதோடு மாதாந்தத் தவணைப் பணத்தையும் கட்டத் தவறியும் விடலாம்.

கரைவலை மீன்பிடிப்பு நீரகத்தோடு பட்டாற்போல் எந்திரமயமாக்கிய படகுகள் மீன்பிடிப்பதில் சிறு நோக்கம் கூட நிறைவேருது என்பதை மாத்திரம் யான் இங்கு சேர்க்க வேண்டிய தேவையிருக்கின்றது. இந்த அம்சத்தில் பிணக்கேதும் இருப்பதாகத் தெரியவில்லை. எந்திரமயமாக்கிய நீர்கொழும்புப் படகின் மீன்பிடிகாரர்களில் ஒருவரான திரு. ஸ்ரனிஸ்லோஸ் பெர்னுன்டோ கரையிலிருந்தும் 10–20 மைல்களுக்கப்பாற்ருன் வழமையாகச் செயலாற்றி வருவதாகக் கூறினுர். அப்படியான குல்லாத் தோணிகள் கூடப் போயடையக் கஷ்டமான நீரகத்திலுள்ளதையே எந்திரமயமாக்கிய படகுகள் எடுக்கின்றமையால், பொதுத் தத்துவங்களின் செம்மையான செயல்முறையாகும்.

கடற்றெழிலுக்குப் பொறுப்பாயுள்ள அமைச்சு குறிப்பிட்ட கொள்கை பி. 7 இலிருக்கின்றது. எந்தக் குறிப்பிட்ட பிராந்தியத்திலாவது உள்ள மீன்பிடியில் எந்திரமயமாக்கிய படகுகள் குறிக்கிடாமலும், எதிரிடையாய்ப் பாதிக்காமலுமிருந்தால் அவைகள், எந்தக் குறிப்பிட்ட பிராந்தியத்திலும் மீன்பிடிக்கும் சுதந்திரமுடையவாயிருக்க வேண்டுமென அது குறிப்பிடுகிறது. போதிய அளவான மீன்பிடித் துறை முகங்களை நிர்மாணிக்கும் வரைக்கும் எந்திரமயமாக்கிய படகுகள் எந்தக் குறிப்பிட்ட (பள்ளி) இடத்தாலாகுதல் (பிரிவு) கரைக்கு வர அனுமதிக்கப்பட வேண்டும். எந்தப் " புள்ளி " என்பதன் அர்த்தம், " சில புள்ளிகள் " என யான் கருதுகிறேன்.

**கற்பார் :**

தகராற்றின் உண்மையான அம்சங்களுக்கு யான் வருவதற்கு முன்னர் கரையிலிருந்து 2½ முதல் 4 மைல்களுக்கப்பால், நடுக்குடாவிலிருந்தும் கிழக்கு முகமாக மன்னூர்த் தீவின் தென் கரைக்குச் சமாந்தரமாய் ஒரு கற்பார் அமைந்திருப்பதாக விசாரணையின் போது தொடர்ந்து குறிப்பிடப் பட்டுவந்ததென்பதை யான் குறிப்பிட வேண்டியிருக்கின்றது. கடலோட்டப்படம் பி. 2 இல், முத்துச் சலாபப் பிராந்தியத்தில் இதன் ஒரு பகுதி தெற்கே அதிக தூரத்திற் கப்பால் காட்டப்பட்டிருந்தாலும் இது இதிற் காண்பதற்கில்லை.

ஆனுல், மன்னூர்ச் சாட்சிக்காரர்களிடத்திலும் குல்லாத் தோணி மீன்பிடிகாரனுன, எம். லான்ஸாவிடத்திலும் இந்தக் கற்பார் இருப்பதையிட்டுப் பொதுவான உடன்பாடிருந்தது: சம்மாட்டியிலொருவரான செவலியர் பெல்டானே, தான் இக்கற்பாருக்குப் போயிருப்பதாகவும் சில அடி தண்ணீரின் கீழ் இதனைக் கண்டிருப்பதாகவும் சாட்சியமளித்தார். அதனைக் கடந்து செல்லுகையில் கௌரவ பண்டாரநாயக்கா அவர்களால் நடாத்தப்பட்ட 1944 ம் ஆண்டு விசாரணையிற் கூட, இக்கற்பார் குறிப்பிடப்பட்ட (ஆட்சேபனை யேதும் தோனறியதாயில்லாது) தையும், தலைமன்னூரிலிருந்து 10 மைல்களுக்கு கற்பார் இருக்கவில்லையெனக் கடற்றெழில் அதிபர் சுட்டிக்காட்டியதையும் யான் குறிப்பிடுகிறேன். இஃது கற்பார், நடுக்குடாவிலிருந்து ஆரம்பிக்கின்றதெனும் கூற்ரேடு ஒத்திருக்கின்றது.

இக்கற்பார், அதில் இடைவெளிகளையுடையதாய் உண்மையில் இருக்கின்றதெனும் செவலியர் பெல்டானேவின் சாட்சியத்தை யான் ஏற்றுக் கொள்கிறேன்.

**குல்லாத் தோணி மீன்பிடியாளர்களுக்கும் கரைவலை மீன்பிடியாளர்களுக்குமிடையில் தகராறு :**

ஏற்கனவே யான் குறிப்பாய்க் கூறியது போன்று இங்கு தகராறேதுமில்லை. மன்னூர்த்தீவுக்குத் தெற்கேயுள்ள கற்பாரிலுள்ள இடைவெளிக்கருகில் குல்லாத்தோணி மீன்பிடியாளர்கள், மீன்பிடிக்கிருர்களென்பதும் கரைப்புறமாக மீன்கள் வருதலில் இது ஓரளவு தலையீடுக்குக் காரணமாயிருக்க வேண்டுமென்றும் குல்லாத் தோணி மீன்பிடியாளர்களைக் கொண்டுவராது, எந்திரமயமாக்கிய படகுகள் தங்கள் மீன்பிடியிற் தலையிடுகின்றதென ஆட்சேபிக்க கரைவலை மீன்பிடியாளர்களுக்கு முடியாத ஒரு விடயமாயிருந்ததென அவர்களே ஒப்புக்கொண்டவாறு இது உண்மையானதாகும்.

சாட்சியத்தின் பொதுப்போக்கு என்னவாயின், 1944 ம் ஆண்டு ஒப்பந்தம் அமுலிலிருந்து வந்ததென்றும் இருகட்சிகளும் இதனை மதித்துவந்தன ரென்பதுமாகும். இத்தோடு, இந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின்படி, குல்லாத் தோணி மீன்பிடியாளர்கள் அருகிப் போகும் ஒரு கூட்டத்தினராகும்.

இச்சூழ்நிலையின் கீழ், இன்றுள்ள ஸ்திதியிலேயே நிலைமையை வைத்துக் கொள்ளவேண்டுமென்றும், நிலையிலுள்ள ஒழுங்குகளுக்கு சட்டரீதியான வல்லமையைக் கொடுக்க ஒழுங்கு விதிகளேதும் வகுக்கக் கூடாதென்றும் யான் சிபாரிசு செய்கிறேன். இப்பொழுது நிலவிவரும் சமாதானத்தைக் குலைத்தல் இரக்கப்படவேண்டியதும் கடுந்தகராறு எழும்பும் பொழுதும், எழும்பினுலும் ஒழுங்கு விதிகளை அமுலுக்குக் கொண்டுவரவும் காலமும் இருக்கும்.

**எந்திரமயமாக்கிய படகு மீன்பிடியாளர்களுக்கும் கரைவலை மீன்பிடியாளர்களுக்குமிடையில் தகராறு :**

இத்தகராறு, 1961 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 14 ந் திகதியன்று அல்லது அதளவில், நீர்கொழும்பிலிருந்து ஏதோ பதினுறு, சரியாகக் கூறின், பதினெட்டு எந்திரமயமாக்கிய படகுகள் தலைமன்னூரில் பழைய வெளிச்சவீட்டுக்கு அண்மையில் கரையேற்றி வைத்ததிலிருந்தும் எழுந்ததாகும். இந்தப் பிராந்தியம் குல்லாத் தோணி மீன்பிடியாளர்கள் தங்கள் தோணிகளை வைத்திருந்த இடமாயிருந்தமையால் எந்திரமயமாக்கிய படகுகளின் வருகை, அநீதியான, அனுமதியற்ற நுளைச்சலாகக் கருதப்பட்டது.

சுற்றிப் பார்வையிடச் சென்றிருந்த உதவி அதிபர் திரு. பீற்றர்ஸ் அவர்கள், கச்சேரியில் விசாரணையொன்றை நடாத்தினுர். அமைதியைச் சீர்குலைக்கும் நிலையை ஏற்படுத்துமாகையால் புலம்பெயர்ந்து வந்துள்ளவர்களைத் தலைமன்னூரிலிருந்தும் மீன்பிடிக்க வேண்டாமென அரசாங்க அதிபரவர்கள் புத்திகூறித் தெண்டித்தாரென்பது பெரும்பாக கடற்றெழிற் பரிசோதகர் ஜனுப். கௌத் அவர்களின் சாட்சியமாகும்.

எவ்விதமான அறிவித்தலுமின்றி, எந்திரமயமாக்கிய படகுகள் ஏரி முகரியைப் பாதுகாக்கும் தென்புற முகத்துவாரத்திற்குப் போய்விட்டன. அவர்கள் ஏரியினுள்ளே செல்லும் மேற்குப்புற வழியிலிருந்து சுமார் அரைமைலுக்கப்பாலும் மன்னாரிலிருந்து கடற்கரைக்குச் செல்லும் வீதி அந்தத்தின் எதிர்புறத்திலுமாகத் தங்கள் படகுகளைக் கரையேற்றி வைத்துக் கொண்டனர். மன்னார்ப் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தராற் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிப் படத்தின் (பி. 31) படி, குறிப்பிட்ட உள்வழிக்கு மேற்குப் புறத்திலுள்ள அரை மைலும் பாடுகள் எதும் இல்லாததைப்போன்று தெரிந்தது. ஆனால், யான் அரசாங்க அதிபரவர்களோடு சென்று உள்ளே செல்கின்ற இடம் வரையும் பாடுகள் நீடித்துக் கிடப்பதாக, பார்வையிட்டு அறிந்து கொண்டேன். உண்மையில், உள்வழிக்குக் குறுக்கே ஒரு கரைவலையைப் போட்டு மீன்பிடித்ததை யான் கண்டேன்.

எந்திரமயமாக்கிய படகுக்காரர்கள் சிறிது காலம் இங்கே தங்கியிருந்தனர். வாடிகளைக் கட்டுவதற்காக முடிக்குரிய காணியைப் பாவித்தமைக்கு அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டு தண்டமும் இறுத்தனர்.

இக்குறுகிய சுருக்கம் பொதுவான அடிப்படை நிலையைத் தருகின்றது. ஜனவரி மாத நண்பகுதியிலிருந்து ஏப்ரல் மாத நண்பகுதி வரைக்குமுள்ள மாதங்கள் கரையையடுத்த மீன்பிடிக்குத் தலை சிறந்த மாதங்களானமையால் புலம் பெயர்ந்து வந்துள்ளவர்கள், தங்கள் மீன்பிடியிற் குறுக்கிட்டு அவ்வவ் வருடத்திற்குரிய மீன்பிடியைக் குறைத்து விடுகின்றனரென மன்னார்க் கரைவலை மீன்பிடியாளர்கள் கருதுகின்றனர்.

**கரைவலை மீன்பிடியிற் குறுக்கீடு :**

எந்திரமயமாக்கிய படகுகள் (குல்லாத் தோணிகளைப் போன்றவைகள்) கரைக்கு வந்து கொண்டிருக்கும் மீன்களை அகப்படுத்துவதற்காக குறிப்பிடப்பட்ட கற்பாரிலுள்ள இடைவெளிகளில் தங்கள் வளிச்சல் வலைகளைப் போட்டுக்கொண்டு, காத்திருக்கின்றனவென ஏதோ விதமான சாட்சியமிருந்தது. எந்திரமயமாக்கிய படகுகள், குல்லாத் தோணிகளைவிடக் கூடிய வலைக்கூட்டங்களை ஏற்றிச் செல்லக்கூடியனவாகையால் அத்தகைய வலைகள் மீன் திரள் ஒன்றில் மட்டுப்பட்டதொகை மீன்களைப் பிடிக்கையில் கற்பாரிலிருந்தும் கரைவலையிலிருந்தும் எஞ்சியுள்ள மீன் திரள் செல்லும் திசையைத் திருப்பிவிடக்கூடுமென்பதையிட்டுக் கூறிய சாட்சியத்தில் விசேடமாக, டாக்டர் கனகரெத்தினம் அவர்களினதையிட்டு யான் திருப்தியடைந்துள்ளேன். அத்தகைய ஒரு பழக்கம் சிக்கனமற்றதும் சேதமுள்ளதுமாகும்.

அத்தகைய தலையீடு உண்மையிலேற்பட்டதா வென்று தீர்மானிக்கக் கஷ்டமானதாகும். இதில் என்ன முக்கியமெனில், உள்ளூர் மீன்பிடியாளர்கள், இத்தலையீட்டின் பெறுபேற்றை அறிந்திருந்து, அச்சத்தோடு எதிர்த்தெழுந்தனர். மாந்தை, முசலி மீன்பிடியாளர்கள் (செயலாற்றுத் தலத்திலிருந்தும் ஓரளவு அப்பாலிருந்தும்கூட) ஏன் உக்கிரமாய் ஒன்றுபட்டு எதிர்த்தனரென்பதை இஃது உண்மையாய் விளக்கி நிற்கின்றது.

அமைச்சுவின் கொள்கையை அகத்திலிருத்தி, எந்திரமயமாக்கிய படகுகள், கரையிலிருந்தும் ஆறு மைல்கள் அல்லது அதற்குமேல் மீன்பிடிப்பதற்கு இடம் தேடவேண்டுமென யான் கருதுகிறேன். இஃது, கரைவலைக்காரர்களும் சிறுவலைக்காரர்களும் கரையிலிருந்தும் முதல் மூன்று மைல்களுக்குமுள்ள நீரகத்தைப் பிரயோகப்படுத்த அனுமதிக்கும். அடுத்த மூன்று மைல்களும் தகுந்த கட்டுப்பாடுகளுக்கு அமைய குல்லாத்தோணி மீன்பிடியாளர்களுக்குக் கிடைக்கக்கூடியதாயிருக்க வேண்டும். இவ்விதமான அமைவு எந்திரமயமாக்கிய படகு மீன்பிடியாளர்களும் குல்லாத் தோணி மீன்பிடியாளர்களும் தாங்கள் எங்கே மீன்பிடிக்கின்றனரென்ற சாட்சியத்தைப் பின்பற்றுவதாயிருக்கின்றமையால், இஃது புதியதெதையும் புகுத்துமாறு யோசனை கூறவில்லை.

மூன்று மைல் எல்லைக்கப்பால் மீன்பிடிப்பதை அடக்க கடற்றொழிற் கட்டளைச் சட்டத்தில் ஒழுங்கு விதிகளை அளிக்க இடமில்லாததால் அமுலுக்குக் கொண்டுவரத் துரதிஷ்டவசமாக சட்ட அனுமதியில்லாதிருக்கின்றது. ஆதலின் யான் :—

(1) உரிமைக் கடல் எல்லையைக் கரையிலிருந்து ஆறு மைல்களாக நீடிக்கும் யோசனையை அமைச்சரவர்கள் ஆலோசிக்க வேண்டும்,

(2) மன்னார், மாந்தை, முசலிப் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர்களின் கரையோரப் பிராந்தியத்தையடுத்த இப்போதுள்ள உரிமைக்கடல் நீரகத்தில், எந்திரமயமாக்கிய படகுகளால் செய்யப்படும் எந்தவிதமான மீன்பிடியும் விலக்கப்படவேண்டும்,

(3) எந்திர மீன்பிடிப் படகுச் சொந்தக்காரர்கள் குறிப்பிட்ட கரையோரப் பிராந்தியத்திலுள்ள ஆறு மைல்களுக்குள்ளும் மீன்பிடிக்கக்கூடாதெனக் கேட்டுக் கொள்ளவும், இந்த வேண்டுகோளை மீறுகின்றவர்களுக்கு கரையேறுவதற்கு அல்லது 'ஏனைய வசதிகள் அரசாங்கத்தால் அளிக்கப்படக்கூடாதெனவும் சிபாரிசு செய்கிறேன்.

**மீன் கரையேற்றும் ஒழுங்குகள் :**

எனது விசாரணையின் அலுவல் நியதிகள் முதன் முதலாக தலையீட்டோடு சம்பந்தப்பட்டதாயிருந்தாலும் " இத் தகராற்றிலிருந்தும் எழுகின்ற குறிப்பிடத்தக்க எல்லா விடயங்களையுமிட்டு " அறிவிக்குமாறும் யான் கேட்கப்பட்டிருக்கின்றேன். ஆதலின், படகுகள் நங்கூரம் பாய்ச்சி வைப்பதையிட்டும் மீன் கரையேற்றுதலையுமிட்டும் சில அவதானங்களை யான் செய்ய வேண்டியிருக்கின்றேன்.

மன்னார் மாவட்டக் கரையோரப் பிராந்தியத்தைச் சுற்றி எந்திரமயமாக்கிய படகுகள் எந்த நிலைமையின் கீழ் செயலாற்ற வேண்டுமென யான் கருதினேனென்பதையிட்டு முன்னரே குறிப்பிட்டுள்ளேன். 1961 ம் ஆண்டில் முதன் முதலாகச் செய்யப்பட்ட மீன்பிடி யாத்திரை ஒரு நிரந்தரப் பழக்கமாய் வேரூன்றி விடுவதற்கு முன்னர் அத்தகைய மாசற்ற தத்துவங்கள் கையாளப்படுதல் நல்லதாகும். புலம் பெயர்ந்து செல்லும் மீன்பிடியாளர்களுக்கு பொதுச்சட்ட உரிமைகள் இருக்கின்ற காரணம் ஒன்றால் மாத்திரம் இப்போதிருக்கும் தாறுமாறான நிலைமையை மோசமாக நிலைகுலைக்கும் ஓட்டையில் தின்றதையும் கன்றைப் பயல் கெடுத்தான் என்பதற்கிணங்கிய நிலையையுருவாக்க அனுமதிக்கப்படுவதற்கு அன்னவர்கள் எதிர்பார்க்கக்கூடாது. ஆனால், அவர்கள் விஜயம் செய்கின்ற பிராந்தியத்தில் நீதியாக நடாத்தப்படுவதற்கு அருகதையுடையவர்களாவர்.

வேறொரு விதமாய்க் கூறின், புலம்பெயர்ந்து செல்லும் நீர்கொழும்பு மீன்பிடியாளர்களுக்கு கரையேறுவதற்கு ஏதோ இடம் அனுமதிக்கப்படாது மன்னார் மாவட்டத்தைச் சுற்றி மீன்பிடிப்பதற்கு அவர்களுக்கு அனுமதியளிப்பதில் அர்த்தமில்லை. எந்திரமயமாக்கிய படகுகளின் சுற்றளவு மட்டுப்பட்டதும் மீன்களுக்குக் குளிர்ப்பாதுகாப்பளிப்பதற்கோ அல்லது விறைப்பாக்குவதற்கோ சௌகரியங்களற்றனவாயுமிருக்கின்றன. ஆதலின், மன்னார்த் தீவில், தென் கரையிலோ அல்லது மேற்கு முனையிலோ தற்காலிகத் " துறைமுகங்கள் " கண்டெடுக்கவேண்டியிருக்கின்றது.

தொழில் நுட்பம் சார்ந்தவரையில் நோக்கின் இஃது சாத்தியமாய்த் தென்படினும் பாடுகளுக்கிடையில் எந்திரமயமாக்கிய படகுகளைக்கரையேற்றி வைப்பதென்பது அசாத்தியமாகும். அத்தகைய வழக்கம் சாதனைக்காகாததும் கடுமையான எதிர்ப்புக்கானதுமாகும். கரையேற்றுவதற்கோ அல்லது நங்கூரம் பாய்ச்சுவதற்கோ கூடியதான இடங்கள் தலைமன்னார் பழையவெளிச்ச வீட்டுக்கும் தென்புற முகத்துவாரத்திற்கும் அண்மையிலுள்ள கரையோரங்கள் மாத்திரமேயாகும். துரதிஷ்டவசமாக, தொழில் நுட்பம் சம்பந்தப்பட்டவரையில் சாட்சியங்களேதும் அளிக்கப்படவோ அல்லது யான் திடமாய் நம்பிக்கைப் படத்தக்கவகையில் கடற்றொழில் பகுதியிலிருந்து சாட்சியமேதும் கிடைக்கவோவில்லை.

தலைமன்னார் பழைய வெளிச்ச வீட்டுக்கு அண்மையிலுள்ள கரையோரத்தை யான் பார்வையிட்டேன். ஆனால், பின்வரும் காரணங்களுக்காக அதனை உபயோகிக்க யான் சிபாரிசு செய்யமுடியாதிருக்கிறேன் :—

(1) எல்லா உள்ள முடிக்குரிய நிலமும், மீன்பிடியாளர்கள் வாடிக்காகப் பகிர்ந்து கொடுக்கப்பட்டு விட்டபடியால், உள்ளூர்வாசிகள், தங்கள் பாகத்தைக் கொடுக்கவிரும்பார்கள்.

(2) மீன்பிடிக் குல்லாத் தோணிகள் ஆங்கு கரையேற்றி வைக்கப்பட்டதாயிருக்கின்றன.

(3) இது போக்குவரத்து முதலியவற்றிற்குக் கஷ்டமான ஒதுக்கான இடமாகவும் காவல்காப்பதற்குக் கஷ்டமானதுமாகும். இந்தியாவிற்குள்ள அண்மையையும் சர்வதேசப் போக்குவரத்தையும் கவனத்தில் கொள்ளும்போது ஒரு முக்கிய அம்சமாகின்றது.

இக்காரணங்களுக்காக இந்த இடம் தகுதியற்றதாகத் தென்பட்டாலும் எனது ஆட்சேபனைகளை மேற்கொள்ளமுடியுமாயின் ஏன் இந்த இடம் பாவிக்கப்படக்கூடாதென்பதற்கு எவ்வித காரணமுமில்லை.

தென்புற முகத்துவாரத்திற்கு இவ்விதமான ஆட்சேபனைகளில் ஒன்றேனுமில்லை. பாடுகளை உடையதும் அதனால் இடம் பிடிக்கமுடியாததுமான தென்புற முகத்துவாரத்தின் இருமருங்குகளினதும் கடற்கரையோரத்தை யான் குறிப்பிடவில்லை. ஏற்கனவே குறிப்பிட்டுள்ள மேற்குக் கரையிலுள்ள வரும்வழியிலுள்ள ஒன்றும் கிழக்கிலுள்ள வேறு ஒன்றுமான, கடலுக்குச் செல்லுகின்ற இரு வழிகளையுடைய மன்னார் ஏரியின் நீரகத்தையே யான் அதிலும் குறிப்பிடுகிறேன். இந்த வழிகளுக்கும் பட்டினத்திற்கு மிடையில், புகையிரத நிலையத்திற்கு அண்மையில், புகையிரத வீதிப் பாலமிருக்கின்றது. இந்தப் பாலத்தின் மேற்கே புகையிரத வீதியின் இரு மருங்கும் மீன் வாடிகளாகப் பாவிக்கக்கூடிய உபயோகப்படுத்தப்படாத முடிக்குரிய சமதரை பரந்தமைந்திருக்கின்றது. திட்டவட்டமான வீதியேதும் இல்லாதிருந்தாலும் வான் வண்டி மூலமாக இந்த இடத்தினையடையக்கூடியதாயிருக்கின்றது.

பாலத்தை அணைந்தாயுள்ள நீர் நல்ல ஆழமானது. இரண்டு பாக ஆழமென ஒரு தோணியிற் சென்றுகொண்டிருந்த ஒருவர் கூறக்கேட்டேன். தன்னந்தனியானதும் கடினமானதுமான ஒரு விடயம் என்னவென்றால், கடலிலிருந்து புகையிரத வீதிப் பாலத்திற்கு ஒரு தனி வழியைக் கண்டெடுத்தலேயாகும்.

கிழக்கு வழியினூடாக ஒரு கால்வாயிருக்கின்றதென்றும், அது பாலத்திற்குக் கீழாற் செல்கின்றதென்றும் ஒரு அங்குலப் படம் காட்டுகின்றது. ஆனால், 4–5 அடி நீர் தேவைப்படுகின்ற எந்திரமயமாக்கிய படகுகளின் உபயோகத்திற்கு இதனைப் பாவிப்பதில கஷ்டங்களிருக்கலாம். உள்ளூரில் நிலவும் அபிப்பிராயம் ஒன்று, இது வண்டலால் நிறைந்திருக்கலாம், மற்றொன்று, முகத்துவாரம் வழமையாய் கழுவிக் கொண்டுபோவதுபோல இந்த் வருடம் முறித்துப்போகாதிருக்கலாம்.

மற்றைய வழி, ஒரு சுற்றுவழியாக பாலத்தின் மற்றப் பக்கத்திற்குச் செல்கின்றது. இப்பாதை பெருக்கு நேரத்தில் படகுகள் செல்லக் கூடியதாய்த் தெரிகின்றது.

யான் குறிப்பிட்ட ஸ்தலத்தைப் பாவிக்கும் வாய்ப்பினைத் துல்லியமாய் அளவிடமுடியாது. அஃது ஒரு பிரச்சனையைத் தீர்க்கும் சாதனைக் கியைநது ஒரு வழியினை நல்கத் தவறியும் ஏனைய இடம் எதையேனும் கண்டெடுக்க முடியாதும் போனால் நீர்கொழும்பிலிருந்து செல்வதைத் தடுப்பதைவிட வேறு எந்த விதமான மார்க்கமும் எனக்குப் புலனாகவில்லை. இந்த விடயத்தில் நீர்கொழும்பு மீன்பிடியாளர்களையிட்டு யான் பெரிதும் துக்கப்படுகிறேன். அவர்கள் தாளாண்மையையும் அஞ்சா முயற்சியுணர்ச்சியையும் காட்டியிருக்கின்றனர். தங்கள் இலக்கை அடையத்தவறுவதாயிருந்தால் அது, பாதகமான பூவியல் அமைவால் மாத்திரமேயாகும். ஆதலின், வாடி யமைத்துள்ள இடத்திற்குப் படகுகளைச் செல்லத்தக்க பாதையை எவ்வள்வு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் நிர்மாணிப்பதையோ அல்லது வேறு தகுந்த துறைமுகங்களை வழங்குவதையோ ஆலோசிப்பது அரசாங்கத்தின் கடமையாகும். ஆதலின், யான் பின்வரும் சிபாரிசுகளைச் செய்கிறேன் :—

(1) தென் கரையில் மன்னார் ஏரியின் உள்வழியின் இரண்டையும் படகுகள் பிரயாணம் செய்யக்கூடிய வாய்க்கால்களையும் மறித்துக் கரைவலையைப் போடுவதையோ அல்லது வேறு மீன்பிடியைச் செய்வதையோ விலக்க ஒழுங்கு விதிகள் வகுக்கவேண்டும்.

(2) மன்னாருக்கு அதி அண்மையிலுள்ள புங்கையிரதப் பாலத்து அணையின் பக்கங்கள் இரண்டிலுமுள்ள நிலம், வாடிக்காய இடமாக ஒதுக்கி வைக்கப்படவேண்டும்.

(3) இந்த இரு வழிகளில் ஒன்றினூடாக, கடலிலிருந்து பாலத்திற்குப் போய்ச் சேரலாமாவென்று திடப்படுத்துவதற்கு உடனடியான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். படகுகள் பாலத்திற்கு அண்மையாக நங்கூரம் பாய்ச்சி நிறுத்தி வைக்கப்படலாம்.

(4) அத்தகைய காரியத்திற்கு இதனைப் பரீட்சித்துப் பார்க்க நீர்கொழும்பிலுள்ள இரண்டு அல்லது மூன்று படகுச் சொந்தக்காரர்கள் அழைக்கப்படவேண்டும்.

(5) இப்பரிசோதனையில் வெற்றி கண்டால் அரசாங்க அதிபரவர்களாற் குறிப்பிடப்படுகின்ற காலத்தில் வாடியாயிருக்கும் இடத்திலிருந்து செயலாற்றுவதற்கு 20 படகுகளுக்கு அனுமதியாணைகள் அளிக்கப்படவேண்டும்.

(6) இப்பரிசோதனை தோல்வியாயின் இவ்வருடத்தில் புலம் பெயர்ந்து செல்வோர் தங்கள் படகுகளை மன்னார்க்கரையோரப் பிராந்தியத்திற் கரையேற்றி வைக்க அனுமதிக்கப்படக்கூடாததோடு புலம் பெயர்ந்து செல்வோர் 1963 ம் ஆண்டிலிருந்து செயலாற்றத்தக்கதாக, முடியுமாயின் பாலம் வரைக்கும் ஒரு வாய்க்கால் தோண்டுவதற்கு உடனடியான நடவடிக்கையும் எடுக்கப்படவேண்டும்.

(7) நங்கூரம் பாய்ச்சி வைக்க அல்லது கரையேற்றி வைக்கத்தக்கவேறு ஏதாவதொரு தகுதியான தலம் கண்டெடுக்கக் கூடியதாயிருந்தால் புலம்பெயர்ந்து செல்லும் மீன்பிடியாளர்கள் அனுமதியாணையின் பேரில் அதனை உபயோகிக்க அனுமதிக்கப்படல் வேண்டும்.

(8) கடற்றொழிற் பகுதி, கரையோரத்தையும் கரையோர நீரகத்தையும் ஆராய்ந்து, மன்னார் மாவட்டத்திலிருந்து எத்தனை எந்திரமயமாக்கிய படகுகள் இலாபகரமாகச் செயலாற்றலாமென்பதை மதிப்பிடுவதிலும், அவைகளை அடக்கக்கூடிய தகுந்த துறைமுகங்களை அடையாளப்படுத்துவதிலும் முயலவேண்டும்.

(9) கரைவலை மீன்பிடி எல்லைக்கு அப்பாற்பட்ட நீரகத்திலுள்ள வழத்தையெடுக்க எந்திரமயமாக்கிய படகுகளை உபயோகிப்பதற்கு மன்னார்வாசிகளுக்கு ஊக்கமளிக்கப்படவேண்டும்.

எனது சிபாரிசுகள் என்னாற் செய்யக்கூடியவற்றுள் தலைசிறந்தவைகள். ஆனால், ஒரு தொகையான காரணங்களுக்காக பிரச்சனையை முற்றாய்த் தீர்க்கக்கூடியனவல்ல :—

(1) இது ஒரு நீள்காலப் பிரச்சனையாகும்.

(2) எந்திரமயமாக்கிய படகுகளின் அபிவிருத்தி, அதற்குச் சரிநிகரான துறைமுக வசதிகள் அபிவிருத்தியாவதற்கு முந்திக் கொண்டது. (நீர்கொழும்பில், துறைமுக வசதிகள் ஏற்கனவே இருந்த படியினால், கஷ்டமேதும் ஏற்படவில்லை).

(3) கரையோர நீரகத்தின் தன்மையையிட்ட தொழில் நுட்பம் சார்ந்த சாட்சியம் இல்லை.

எனது அறிக்கையை ஆதாரமாய்க் கொண்டு பிரச்சனையைத்தீர்க்கும் நிரந்தரமான ஒரு மார்க்கத்தைக் காணும்வரை தற்காலிக உபயமாயிருக்கவே இதனைத் தீர்க்கும் முடிவு, கருத்துக் கொண்டது. புலம் பெயர்ந்து செல்லும் மீன்பிடியாளர்களுக்குத் துறைமுக வசதிகள் தேடியெடுக்கப்பட வேண்டுமென்றும் அவைகள் இல்லாவிட்டால் அந்த வசதியை நல்க வேண்டுமென்பதும் அரசாங்கக் கொள்கையின் விதிப்பு என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆனால் புலம் பெயர்ந்து செல்லுதல் மிக அண்மையில் உருவாய தொன்றானமையால், செவ்வனே விருத்தியடைந்த ஒரு உள்ளூர்த் தொழிலை நிலைகுலைக்கவும் இலங்கையின் நலனுக்காக தோளோடு தோளாய் எல்லா ரகமான மீன்பிடிகளும் நிலைக்கக்கூடிய ஒரு நிரந்தரமான ஒழுங்கினைத் தாபிதம் செய்தலையிட்டுத் தப்பபிப்பிராயத்தினை ஏற்படுத்தவும் அனுமதிக்கக்கூடாதெனபது அத்தியாவசியமாகும்.

சமாதான முறையில் இதனைத் தீர்க்க ஒரு வழியைக் காணும் நம்பிக்கையோடு நான் இருந்தேன். உள்ளூர் மீன்பிடியாளர்களின் நியாயவாதி, விவாத விடயங்களையும் ஒப்புக்கொண்டவைகளையுமெடுத்து தீர்மானிபபோமென ஆலோசனை கூறினார். ஆனால், இஃது புலம் பெயர்ந்த செல்லும் மீன்பிடியாளர்களின் நியாயவாதிக்கு பிடித்தமானதாயில்லை. இந்த நடைமுறையை வற்புறுத்த யான் அருகதையுள்ளவனாகக் கருதவில்லையெனினும், நீதிமன்றத்தில் நடப்பதைப்போன்று (முழு ஒப்பாசார முறையில்லாவிடினும்) சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. ஆதலின், இறுதியான சிபாரிசுகள் செய்வது எனது சொந்தப் பொறுப்பென்பதையும் கண்டேன். அவைகள் எப்புறத்தினரையோ மகிழ்விக்காதென யான் கருதுகிறேன். ஆனாலும், நியாயமானதாகவும் அரசாங்கக் கொள்கையோடு அமையவும் என்னாலானமட்டும் முயன்றுள்ளேன்.

யான், அனேகருக்கு நன்றி செலுத்த வேண்டியவனாயிருக்கிறேன். சட்டத்தை விளக்கிய, பொருத்தமான அம்சங்களுக்கு கவனத்தை கோரி எமக்குதவியாயிருந்த கற்றுணர்ந்த நியாயவாதிகள் ; சாட்சியமளித்த அரசாங்க உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் ; கடற்றொழிற் பகுதி உத்தியோகத்தர்கள் ; இடத்தைப் பார்வையிடுவதற்காக என்னுடன் கூடிவந்த மன்னார் அரசாங்க அதிபர் ; கடைசியாக, ஆனால் கடைத்தரமாயல்லாத கூடிய ஆற்றலோடும் நல்லெண்ணத்தோடும் வேலை செய்த சுருக்கெழுத்தாளர், பேச்சு மொழிபெயர்ப்பாளர்களுக்கும் நன்றி செலுத்துகிறேன்.

கடைசியாக, புலம் பெயர்ந்து செல்லும் பருவகாலம் இதாய் இருப்பதை யான் குறிப்பிடவேண்டும். இந்த அறிக்கை செய்யப் படும்வரை, ஏதும் செய்யாது தாமதித்து நிற்க, நீர்கொழும்பு புலம் பெயர்ந்து செல்லும் மீன்பிடியாளர்கள் உடன்பட்டனர். ஆதலின், தாமதமேதுமின்றி தேவையான அத்தகைய நடவடிக்கைகளை யெடுத்தல் அமைச்சரின் தேவையாகும்.

டபிள்யூ. ஜே. ஏ. வான்லங்ஹன் வேர்க்,
ஆணையாளர்.

1962 ம் ஆண்டு டிசம்பர் மீ 5 ந் உ.

இணக்கப்படி முற்பகல் 10 மணிக்கு வாசிக்கப்பட்டது. இது சிங்களத்தில் வாசிக்கப்படவில்லை. விருப்பின்படி, இதன் சுருக்கம் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. திரு. கே. எஸ். சோக்ஸியும் திரு. பேர். வன்னித்தம்பியும் உள்ளூர் மீன்பிடியாளர்களுக்காகத் திரு. பி. வீ. பி. டீ ஸில்வா புலம் பெயர்ந்து செல்லும் மீன்பிடியாளர்களுக்காக.

6–257

***வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.***

***வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.***

***அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள்யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு. அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.***

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது